# Implementation of Scheduled Tribes and Other Traditional Forest Dwellers (Recognition of Forest) Act, 2006.

-------

The Government of India has enacted "The Scheduled Tribes and Other Traditional Forest Dwellers (Recognition of Forest Rights) Act, 2006 which came into existence on 29.12.2006. Under this Act, the State Government have to recognize and vest the forest rights and occupation in forest lands in forest dwelling scheduled tribes and other traditional forest dwellers who have been residing in forests for generations but whose rights could not be recorded and therefore it has become necessary to address this long standing demand of Scheduled Tribes people and the traditional forest dwellers. This Act extends to the whole of India except the State of Jammu and Kashmir.

2. Government of India have requested the State Government to implement the provision of this Act and distribute title deeds to the claimants before 31.12.2009. In order to implement this Act, the State Government have already constituted following Committees:-

i) State Level Monitoring Committee headed by the Chief Secretary.
ii) District Level Committee headed by the District Collector.
iii) Sub-Divisional Level Committee – headed by the Revenue Divisional Officer.

**3. Objective of the Act.**

i) To give rights to Scheduled Tribes and other traditional Forest Dwellers of land in their historical possession.
ii) To provide rights to Scheduled Tribes and other traditional forest dwellers to collect, use and dispose off minor forest produce.
iii) To provide rights to Scheduled Tribes and other Traditional Forest Dwellers on land used for Community purposes.

Under the provision of this Act, land rights are to be conferred to scheduled tribes who are in possession of land upto 13$^{th}$ December 2005. (Cut-off date) and land rights to other traditional forest dwellers in case they are in possession of the land for three generations calculated as 75 years.

4. The District Collectors have to facilitate to hold meetings of Gram Sabhas in villages and to set up Forest Rights Committees to decide the nature and extent of forest rights of individuals or for community purposes and submit reports to the Gram Sabhas which will pass resolutions on claims on forest rights after giving reasonable opportunity to be heard to the interested persons etc., The Gram Sabhas then will send their reports to the Sub-Divisional Level Committee after scrutiny of claims of the claimants. In short, the Sub-Divisional and District Level Committees would be monitoring the process of recognition and vesting of forest rights and hear appeals (if any).

**5. Claims Received for Forest Rights:**

As on 31.08.2009, 8502 claims have been received from 15 Districts in the State as under. However, till date only 89 title deeds are finally kept ready in the Villupuram District only.

**CLAIMS RECEIVED UNDER THE ACT AS ON 31.08.2009.**

| Sl. No. | District | Claims Received |
|---|---|---|
| 1. | Villupuram | 2898 |
| 2. | Dindigul | 601 |
| 3. | Vellore | 380 |
| 4. | Coimbatore | 1273 |
| 5. | Tiruvannamalai | 120 |
| 6. | Trichy | 70 |
| 7. | Salem | 548 |
| 8. | Namakkal | 52 |
| 9. | The Nilgiris | 270 |
| 10. | Virudhunagar | 48 |
| 11. | Erode | 735 |
| 12. | Tirunelveli | 32 |
| 13. | Kanniyakumari | 946 |
| 14. | Theni | 79 |
| 15. | Dharmapuri | 450 |
| | Total | 8502 |

6. The Chief Secretary has already convened 2 meetings of the State Level Committee on 19.11.2008 and on 06.08.2009 and reviewed the progress. There is an urgent need to step up the efforts at the District Level to complete the task before 31.12.2009. The State Government have already committed to the Government of India that all claims will be scrutinized, finalized and title deeds are distributed to the eligible claimants before 31.12.2009.

7. Therefore these 16 District Collectors have to evince interest to see that the Gram Sabha meetings are organized at village levels, Forest Rights Committee are formed and claims are received, verified and are finalized. The distribution of the title deeds to the claimants shall be done after getting clearance from the Hon'ble High Court of Madras as the Court have already directed the State Government to process claims but actual distribution of title deeds shall be done after getting orders from the High Court (as ordered in M.P.No.1 of 2008, in W.P. No.4533/2008, dated 30.04.2008).

## பழங்குடியினர் மற்றும் பிறவழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம் 2006 – நடைமுறைப்படுத்துதல்

இந்திய அரசு பழங்குடியினர் மற்றும் பிற மரபுவழியாக வனங்களில் குடியிருப்போர் (வனஉரிமைகளை அங்கீகரித்தல்) சட்டம் 2006 இயற்றியுள்ளது, இது 29.12.2006 முதல் நடைமுறைக்கு வருகிறது. இந்தச் சட்டத்தின்படி மாநில அரசுகள் பழங்குடியினர் மற்றும் பிற மரபுவழியாக வனங்களில் குடியிருப்போருக்கு வனநில உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு, வரையறை செய்யப்பட்டு தீர்வு காணப்படல் வேண்டும். அவர்கள் பன்னெடுங்காலமாக வனங்களில் வாழ்ந்தாலும் அவர்கள் உரிமைகள் அங்கீகரிக்கப்படவில்லை. எனவே, இந்த நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போரின் கோரிக்கை தீர்வுகாணப்படல் வேண்டும். இந்தச் சட்டம் ஜம்மு மற்றும் காஷ்மீர் தவிர அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும்.

மத்திய அரசு மாநில அரசுகளை இந்தச் சட்ட அங்கங்களை செயல்படுத்தி 31.12.2009க்குள் கோரிக்கைதாரர்களுக்கு உரிமைப் பட்டா தயார் செய்து வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது, மாநில அரசு இந்தச் சட்டத்தை செயல்படுத்த ஏற்கனவே கீழ்க்கண்ட குழுக்களை அமைத்துள்ளது.

i) தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்ட மாநில அளவிலான கண்காணிப்புக்குழு,
ii) மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான குழு.
iii) வருவாய் கோட்ட அலுவலரைத் தலைவராகக் கொண்ட உட்கோட்ட குழு.

**இந்தச் சட்டத்தின் குறிக்கோள்.**

(அ) வனத்தில் குடியிருக்கும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் அல்லது பிற மரபு வழியாக வனத்தில் குடியிருக்கும் உறுப்பினர் அல்லது உறுப்பினர்களால் உறைவிடத்திற்காக அல்லது பிழைப்புத் தேவைகளுக்காக சுய சாகுபடி செய்தலுக்காக தனியாள் அல்லது பொதுமக்கள் வாழ்க்கைத் தொழிலின்படி வன நிலத்தினை வைத்திருப்பதற்கான மற்றும் வாழ்வதற்கான உரிமை.

(ஆ) கிராம எல்லைகளுக்குள்ளோ அல்லது வெளியோ மரபு வழியாக சேகரிக்கப்பட்டுள்ள சிறிய வன உற்பத்திப் பொருட்களை சேகரிப்பதற்கு, பயன்படுத்துவதற்கு மற்றும் தீர்வு செய்வதற்கு அணுகும் வாய்ப்பு உடைமை உரிமை;

(இ) பழங்குடியினர் மற்றும் பிறமரபு வழியாக வனங்களில் வாழும் சமுதாயத்துக்கு, சமுதாய பயன்பாட்டுக்கு நில உரிமை.

இந்தச் சட்டத்தின்படி வனநிலத்தில் பழங்குடியினர் 13.12.2005க்கு முன்பிருந்தே அனுபவத்தில் இருப்பவர்களுக்கும், மரபு வழியாக வனங்களில் குடியிருப்போருக்கு மூன்று தலைமுறையாக (மூன்று தலைமுறை என்பது 75 ஆண்டுகள்) அவர்கள் அனுபவத்தில் உள்ளவர்களுக்கும் நில உரிமைப் பட்டா பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள்.

4) மாவட்ட ஆட்சியர்கள் கிராமசபைக் கூட்டங்களை நடத்த ஊக்குவித்து, வன உரிமைகள் குழுக்களை அமைத்து தனி நபர்கள் மற்றும் சமுதாய வன உரிமைகளை வரையறை செய்து கிராம சபைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டு நன்கு விவாதிக்கப்பட்டு, சரிபார்க்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நபர்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்கள் கொடுக்கப்பட்டு, அந்த கோரிக்கை மனுக்கள் உதவி கோட்ட குழுவுக்கு அனுப்பப்படல் வேண்டும். சுருக்கமாகச் சொல்வதானால் உதவி கோட்ட குழுவும், மாவட்ட அளவிலான குழுவும் வன உரிமைகள் வழங்கப்படுவதை கூர்ந்தாய்வு செய்வதோடு மேல்முறையீட்டையும் கேட்கும் (மேல்முறையீடு ஏதாவது இருப்பின்).

<u>வன உரிமைகள் கோரி வரப்பெற்ற கோரிக்கைகள் விவரம்.</u>

வன உரிமைச் சட்டம், 2006–ன் கீழ் 31.08.2009 அன்றைய தேதியில் 15 மாவட்டங்களிலிருந்து மொத்தம் 8502 கோரிக்கைகள் வரபெற்றுள்ளன. இதில் விழுப்புரம் மாட்டத்தில் 89 கோரிக்கை மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு உரிமைப் பட்டா தயார் நிலையில் உள்ளது.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | விழுப்புரம் | 2898 |
| 2 | திண்டுக்கல் | 601 |
| 3 | வேலூர் | 380 |
| 4 | கோயம்புத்தூர் | 1273 |
| 5 | திருவண்ணாமலை | 120 |
| 6 | திருச்சி | 70 |
| 7 | சேலம் | 548 |
| 8 | நாமக்கல் | 52 |
| 9 | நீலகிரி | 270 |
| 10 | விருதுநகர் | 48 |
| 11 | ஈரோடு | 735 |
| 12 | திருநெல்வேலி | 32 |
| 13 | கன்னியாகுமரி | 946 |
| 14 | தேனி | 79 |
| 15 | தர்மபுரி | 450 |
| | மொத்தம் | 8502 |

**6)** தலைமைச் செயலர் அவர்கள் ஏற்கனவே **19.11.2008** மற்றும் **06.08.2008** ஆகிய தேதிகளில் மாநில கண்காணிப்புக்குழுக் கூட்டத்தினை நடத்தி இத்திட்டத்தின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்துள்ளார். மாநில அரசு, மத்திய அரசுக்கு அனைத்து கோரிக்கை மனுக்களும் பரிசீலனை செய்யப்பட்டு சரியான நபர்களுக்கு உரிமை கோருவோருக்கு **31.12.2009**க்குள் உரிமைப் பட்டா வழங்கப்படும் என உறுதியளித்துள்ளது.

எனவே, இந்த **16** மாவட்ட ஆட்சித் தலைவர்களும் இதில் ஆர்வத்தோடு கிராம சபைக் கூட்டங்களை கூட்டுவதோடு, வனஉரிமைக் குழுக்களை அமைப்பதோடு, கோரிக்கைகளைப் பெற்று சரிபார்த்து முடிவு செய்ய வேண்டும். வன உரிமைப் பட்டாக்கள் தயார் செய்யப்பட்டாலும் அவற்றை உச்சநீதிமன்ற ஆணை கிடைத்த பின்னரே கோரிக்கைதாரர்களுக்கு வழங்க வேண்டும் (உச்சநீதிமன்ற உத்தரவு எண்.M.P.No.1 of 2008. in W.P.4533/2008, Dt.30.04.2008).

**பங்குடியினர் நல இயக்குநர்**